ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2256/10 - 2021 නොවැම්බර් මස 29 වැනි සඳුදා - 2021.11.29

2256/10 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

### அதிமேதகு சனாதிபதி அவர்களால் செய்யப்படும் கட்டளை

*1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவைச் சட்டம்*

(முத்திரை)

**கோட்டாபய ராஜபக்ஷ.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் 02 ஆம் பிரிவின் மூலம் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இவ் அறிவித்தல் மூலம் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகள் வழங்கலில் ஈடுபடும் எந்தவொரு அரச கூட்டுத்தாபனத்திலிருந்து அல்லது அரச திணைக்களத்திலிருந்து அல்லது உள்ளூராட்சி நிறுவனத்திலிருந்து அல்லது கூட்டுறவு சங்கத்திலிருந்து அல்லது அவற்றின் கிளையிலிருந்து வழங்கப்படும் சேவைகள் பொதுமக்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானது எனக் கருத்தில் கொண்டும் மற்றும் அந்தச் சேவைகளை வழங்குவதற்கு இடையூறு அல்லது தடைகள் ஏற்படக்கூடும் என்ற காரணத்தினாலும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் கொவிட் 19 நோய்த் தடுப்புத் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களையும் கவனத்தில் கொண்டு எந்தவொரு அரச கூட்டுத்தாபனத்திலிருந்து அல்லது அரச திணைக்களத்திலிருந்து அல்லது உள்ளூராட்சி நிறுவனத்திலிருந்து அல்லது கூட்டுறவுச் சங்கத்திலிருந்து அல்லது அரச வங்கியிலிருந்து அல்லது அவற்றின் கிளையிலிருந்து வழங்கப்படும் பின்வரும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள சேவைகளை மேற்குறிப்பிட்ட பிரிவின் கருமங்களுக்காக அத்தியாவசிய சேவைகளென இந்த ஆணையின் மூலம் பிரகடனம் செய்கின்றேன்.

இரண்டாயிரத்து இருபத்தோராம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி கொழும்பில் கையொப்பமிடப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

## அட்டவணை

1. 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, துறைமுக அதிகாரசபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் மூலம் தாபிக்கப்பட்ட இலங்கைத் துறைமுக அதிகார சபையினால் அதற்கமைவாக மேற்கொள்ளப்பட வேண்டிய அல்லது தேவைப்படும் எந்தவொரு தன்மையிலான சேவையின் சகல சேவைகள், வேலைகள் மற்றும் தொழில் பங்களிப்பு.

2. பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் திரவ வாயு உள்ளிட்ட அனைத்து எரிபொருள் வழங்கல் அல்லது பகிர்ந்தளித்தல்.

3. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காகத் துறைமுகம் எனப் பொருள்கோடல் செய்யப்பட்டுள்ள எந்தவொரு துறைமுகத்திலுள்ள கப்பலிலிருந்தும் எண்ணெய் அல்லது எரிபொருளை வெளியோற்றுதல், கொண்டுசெல்லல், தரையிறக்குதல், களஞ்சியப் படுத்துதல், ஒப்படைத்தல் அல்லது அகற்றுதல் தொடர்பாக நிறைவேற்றப்பட வேண்டிய அல்லது அத்தியாவசியமான அனைத்துச் சேவைகள், வேலைகள் அல்லது எந்த வகையிலுமான ஊழியப் பங்களிப்பு.

4. பொருட்களைக் கொண்டுசெல்வதற்காக இலங்கைப் புகையிரதத் திணைக்களம் மற்றும் வீதிப் போக்குவரத்துக்காக இலங்கை போக்குவரத்துச் சபையின் மூலம் மேற்கொள்ளப்படும் சகல பொதுப் போக்குவரத்துச் சேவைகள்.

5. சொல்லப்பட்ட பொதுச் சேவைகளானது சேவைகளின் தேவைப்பாட்டின் வண்ணம் மேற்கொள்ளுவதற்காகத் தேவைப்படும் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

6. சகல மாவட்டச் செயலாளர் அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கமத்தொழில் ஆராய்ச்சி உதவியாளர்கள் உள்ளிட்ட சகல மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் துறைசார் மட்டத்திலுள்ள உத்தியோகத்தர்கள் ஆகியோரால் மேற்கொள்ளப்படவேண்டிய அல்லது செயற்படுத்தப்படவேண்டிய தேவையான எந்தவொரு தன்மையிலான சகல சேவைகள், வேலைகள் மற்றும் ஊழியப் பங்களிப்பு.

7. இலங்கை மத்திய வங்கி உள்ளிட்ட சகல அரச வங்கிகள் மற்றும் காப்புறுதிச் சேவை நடவடிக்கைகள்.

8. உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் கழிவுப்பொருட்கள் முகாமைத்துவச் சேவை நடவடிக்கைகள்.

9. வரையறுக்கப்பட்ட இலங்கை கூ. மொ. வி. நி. கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம், உணவு ஆணையாளர் திணைக்களம், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபை, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி தனியார் கம்பனி என்பவற்றின் மூலம் மேற்கொள்ளப்படும் சகல உணவு, குடிபானப் பொருட்கள் உள்ளிட்ட பொதுமக்களுக்குத் தேவையான ஏனைய சகல நுகர்வுப் பொருட்களை வழங்குதல், களஞ்சியப்படுத்துதல் மற்றும் விநியோகித்தல் ஆகிய நடவடிக்கைகள் தொடர்பாகத் தேவையான அல்லது மேற்கொள்ளப்படவேண்டுமெனக் கருதப்படும் சகல சேவைகள், வேலைகள் அல்லது எந்தவொரு விதத்திலான ஊழியப் பங்களிப்பை வழங்குதல்.

10. மாகாண சபைகளின் கீழுள்ள சகல அரச அலுவலகங்கள் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய அல்லது தேவைப்படும் எந்த வகையிலான சகல சேவைகள், வேலைகள் அல்லது ஊழிப் பங்களிப்பு.

11. சுகாதார சேவைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய அல்லது தேவைப்படும் எந்த வகையிலான சகல சேவைகள், வேலைகள் அல்லது ஊழியப் பங்களிப்பு.

12. தபால் திணைக்களத்தின்கீழ் செயற்படுத்தப்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடிதங்கள், அச்சுப் பொருட்கள் மற்றும் பொதிகளைக் கையேற்றல், விநியோகித்தல் மற்றும் தகவல்களை அறிக்கையிடுதல், பதிவுத் தபால் கடிதங்கள், பெறுமதி செலுத்தி கையளித்தல் சேவைகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விரைவுத் தபால் சேவை, மருந்துப்பொருட்கள் விநியோக விசேட சேவை, பணப்பரிமாற்றங்கள் உள்ளிட்ட ஏனைய தபால் சேவைக்குரிய பணிகள்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.